



## சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில், 3,550 கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசு வழங்கும் விழா:

# தமிழ்நாட்டை, தமிழ் மக்களை, தமிழ்நாட்டின் உரிமைகளைக் காக்க வருகின்ற தேர்தலில் கழக நிர்வாகிகள் அயராது உழைக்க வேண்டும்!

## சென்னை டவுட்டனில் நடைபெற்ற பொங்கல் விழாவில்

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் எழுச்சிமிக்க உரை!

சென்னை,ஜன.11–

**சென்னை கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில், டவுட்டன் பகுதியில் நடைபெற்ற பொங்கல் விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்துகொண்டு 3550 கழக நிர்வாகிகளுக்கு பொங்கல் பரிசுகளை வழங்கி வாழ்த்திப்பேசினார்.**

**அப்போது அவர், "வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தல் மிக மிக முக்கியமான தேர்தல். இது தமிழ்நாட்டை, தமிழ்நாட்டு மக்களை, தமிழ்நாட்டின் உரிமைகளை எல்லாம் பாதுகாக்கின்ற ஒரு தேர்தல். தமிழ்நாட்டைத் தமிழர்கள் ஆள்கிறார்களா அல்லது டெல்லி ஆளப்போகிறதா என்பதை முடிவு செய்யப்போகின்ற தேர்தல். இதை உணர்ந்து கழக நிர்வாகிகள் அயராது உழைக்க வேண்டும்" என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய எழுச்சிமிக்க உரை வருமாறு:**

சென்னை கிழக்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக நடைபெறுகின்ற பொங்கல் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உங்களையெல்லாம் சந்திப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். முதலில் இங்கு வந்திருக்கக்கூடிய அத்தனை பேருக்கும் என்னுடைய ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துகள், 'ஹேப்பி நியூ இயர்'. உங்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சரியாக 15 நாட்களுக்கு முன்புதான் கிறிஸ்துமஸ் நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும் என்று அண்ணன் சேகர்பாபு அவர்கள் என்னை இந்த மாவட்டத்திற்கு அழைத்து வந்தார். அதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு தீபாவளி நிகழ்ச்சியை ஒட்டி அந்த நலத்திட்ட உதவி நிகழ்ச்சிகளுக்கு வந்திருந்தேன். இன்று தொடர்ந்து பொங்கல் நிகழ்ச்சிக்காக உங்களையெல்லாம் சந்திக்கின்ற அந்த வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன். இப்படித் தொடர்ச்சியாக இந்தச் சென்னை கிழக்கு மாவட்டக் கழகத்தில் நடக்கின்ற நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறேன்.

நான் பலமுறை சொல்லியிருக்கிறேன், நான் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர்; ஆனால், என்னுடைய தொகுதியில் கலந்துகொள்கின்ற நிகழ்ச்சிகளை விட இந்தச் சென்னை கிழக்கு மாவட்டத்தின் துறைமுகம் தொகுதியில் அதிகமான நிகழ்ச்சிகளில் கலந்துகொள்கிறேன். நான் சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினரா அல்லது துறைமுகம் சட்டமன்ற உறுப்பினரா என்று எனக்கே சந்தேகம் வருகின்ற அளவிற்கு என்னை அழைத்து வந்து பல்வேறு நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து நடத்துகிறார்.

ஒரு நிகழ்ச்சி முடிந்து என்னை வீட்டில் விடுவதற்காக அண்ணன் சேகர்பாபு அவர்கள் வருகிறார் என்று நினைத்தால், அது தவறு; அவர் அடுத்த நிகழ்ச்சிக்குத் தேதி வாங்குவதற்குத்தான் என்னுடன் வந்துகொண்டிருக்கிறார் என்று அர்த்தம். நிச்சயம் அது இன்றைக்கும் நடக்கும். அந்த அளவிற்கு எல்லோருக்கும் சவால் கொடுக்கின்ற அளவிற்கு அவருடைய உழைப்பு இருக்கும்.

இன்னும் நாம் பெருமையாகச் சொல்ல வேண்டுமென்றால், தலைவர் அவர்கள் அடிக்கடி சொல்வார், ``நீ வெறும் சேகர்பாபு கிடையாது, செயல்பாபு" என்று. தலைவரால் பலமுறை பாராட்டப் பெற்றவர் அவர். அப்படிப்பட்ட அண்ணன் சேகர்பாபு அவர்கள் இன்றைக்கு நிகழ்ச்சிகளைச் சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கிறார்.

### நான்கு நிகழ்ச்சிகள்

ஒரு கைபேசி (*Cell phone*) வாங்கினால் 'டேட்டா பேக்கேஜ்' கொடுப்பார்கள் அல்லவா, அதுமாதிரிதான் இன்றைக்குப் பார்த்தீர்கள் என்றால், ஒரு 10 நாட்களுக்கு முன்புதான் இந்தத் தேதியை வாங்கினார். என்ன நிகழ்ச்சி என்று நான் கேட்டபோது, பொங்கல் நிகழ்ச்சி என்று சொன்னார். ஆனால், அவர் என்னிடத்தில் நான்கு நிகழ்ச்சிகள் இருக்கின்றன என்று சொல்லவே இல்லை. நான் ஒரு நிகழ்ச்சி என்று நினைத்துக்கொண்டு வந்தேன். இன்றைக்கு மட்டும் இது நான்காவது நிகழ்ச்சி.

முதலில் பாரதி மகளிர் கல்லூரியின் நீண்டகாலக் கோரிக்கையான ஓர் அரங்கம் வேண்டும் என்கிற கோரிக்கையை நம்முடைய அண்ணன் சேகர்பாபு அவர்கள் உடனடியாக முதலமைச்சர் கவனத்திற்குக் கொண்டு சென்று, அதற்காக நிதியும் பெற்று இன்றைக்கு அதற்கு அடிக்கல்லும் நாட்டப்பட்டிருக்கிறது. இன்னும் நான்கு மாதங்களில் பாரதி மகளிர் கல்லூரியில் ஒரு புதிய கலையரங்கம் வர இருக்கிறது.

அதன் பிறகு அன்னை தயாளு அம்மாள் தொண்டு நிறுவனத்தில் பயிற்சி பெறுகின்ற, படித்துக் கொண்டிருக்கக்கூடிய 4,500 மாணவ - மாணவிகளுக்கு நலத்திட்ட உதவி நிகழ்ச்சியை நடத்தியிருக்கிறார்கள்; அந்த நிகழ்ச்சியிலும் கலந்துகொண்டு இங்கே வந்திருக்கின்றேன்.

அதைத் தொடர்ந்து இங்கே இருக்கக்கூடிய பாரிமுனை ராஜா அண்ணாமலை மன்றத்தில் மறு கட்டுமானப் பணிக்காகக் குடிபெயர்ந்து போயிருக்கக்கூடிய 1,200 குடும்பங்கள் பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி இருக்கிறார்.

### கழக உடன்பிறப்புகள்

இப்போது கழக உடன்பிறப்புகள் சுமார் 3,600 பேருக்கு நலத்திட்ட உதவிகளை இங்கே வழங்கி இருக்கிறார். இப்படி நான்கு நாட்கள் நடத்த வேண்டிய நிகழ்ச்சியை ஒரே நாளில் நடத்திக் காட்டியிருக்கிறார் அண்ணன் சேகர்பாபு அவர்கள்.



எந்த விழாவாக இருந்தாலும் அதை வெறும் பிரம்மாண்டமாக மட்டுமல்ல, அதை அர்த்தத்தோடு நடத்தக்கூடிய ஒரு முன்னோடிதான் அண்ணன் சேகர்பாபு அவர்கள்.

கலைஞர் பிறந்தநாளாக இருக்கட்டும், தலைவர் பிறந்தநாளாக இருக்கட்டும், இனமானப் பேராசிரியர் தாத்தாவின் பிறந்தநாளாக இருக்கட்டும், கிறிஸ்துமஸ், பொங்கல், ரம்ஜான், தீபாவளி எந்த விழாவாக இருந்தாலும் சரி... இன்னும் சொல்லப்போனால் என்னுடைய பிறந்தநாளுக்கு நான் எந்த நிகழ்ச்சியிலும் கலந்துகொள்வது கிடையாது, அதற்கும் அண்ணன் சேகர்பாபு அவர்கள் மட்டும்தான் விதிவிலக்கு.

தந்தை பெரியார் திடலுக்கு வருவதை வைத்துக்கொண்டு எப்படியாவது என்னை வைத்து ஒரு நிகழ்ச்சியை நடத்திவிட வேண்டும் என்று அதையும் தொடர்ந்து செய்துகொண்டு வருகிறார். இப்படிப் பொதுமக்களுக்கும் கழகத்தினருக்கும் பயன்தரக்கூடிய வகையில் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் திட்டமிட்டுச் செயல்படுத்தக்கூடியவர்தான் அண்ணன் சேகர்பாபு அவர்கள்.

### திராவிடப் பொங்கல்

இந்த முறை தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார், ``இந்தப் பொங்கலை மிகச் சிறப்பாகக் கொண்டாட வேண்டும். திராவிடப் பொங்கலாகக் கொண்டாட வேண்டும்" என்று. ஏனென்றால் பொங்கல் என்பது நம்முடைய பண்பாட்டுத் திருவிழா; உழைப்பைக் கொண்டாடுகின்ற திருவிழா. சாதி மதங்களுக்கு அப்பாற்பட்ட பண்டிகை என்றால் அது நம்முடைய பொங்கல் பண்டிகை மட்டும்தான். அப்படிப்பட்ட பொங்கல் பண்டிகையை முன்னிட்டு திராவிட முன்னேற்றக் கழகம் தலைவரின் அறிவுறுத்தலின்படி, இன்றைக்குச் சென்னை கிழக்கு மாவட்டம் மட்டுமல்ல, தமிழ்நாடு முழுக்கப் பல்வேறு நலத்திட்ட உதவி நிகழ்ச்சிகளைச் செய்துகொண்டிருக்கிறது.

கழகம் மட்டுமல்ல, நம்முடைய திராவிட மாடல் அரசும் இன்றைக்குப் பல்வேறு சிறப்புத் திட்டங்களை இந்தப் பொங்கலை முன்னிட்டுச் செய்துகொண்டிருக்கிறது. குறிப்பாக இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அத்தனை குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசாக 3,000 ரூபாய் அறிவித்து, இன்றைக் காலையிலிருந்து அதைக் கொடுக்க ஆரம்பித்திருக்கிறோம். கடந்த மாதம் வரை 'கலைஞர் மகளிர் உரிமைத் தொகை'யை ஒரு கோடியே 13 லட்சம் பேர் வாங்கிக்கொண்டிருந்தார்கள். இந்த மாதத்திலிருந்து அது அதிகரிக்கப்பட்டு இன்றைக்கு ஒரு கோடியே 30 லட்சம் மகளிருக்கு மகளிர் உரிமைத் தொகை கொடுத்துக்கொண்டிருக்கிறோம்.

மாணவ மாணவிகளுக்கு 2019-இல் எடப்பாடி பழனிசாமி அவர்கள் ஆட்சியில் இருக்கும்போது கைவிடப்பட்ட மடிக்கணினி வழங்கும் திட்டத்தை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் அறிவித்து, இந்த வருடம் மட்டும் 10 லட்சம் மடிக்கணினிகள் இறுதி ஆண்டு பயிலும் கல்லூரி மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இப்படிப் பல்வேறு திட்டங்கள்... கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், மகளிருக்கு விடியல் பயணத் திட்டம், முதலமைச்சர் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், இல்லம் தேடி கல்வி, மக்களைத் தேடி மருத்துவம் எனப் பல்வேறு திட்டங்களை நம்முடைய அரசு செயல்படுத்தி இருக்கிறது.

### இந்தியாவிலேயே நம்பர் ஒன்

இன்றைக்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள், நம்முடைய அரசு இவ்வளவு சிறப்பாகச் செயல்பட்டதால்தான் இந்தியாவிலேயே 'நம்பர் ஒன்' மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு விளங்கிக் கொண்டிருக்கிறது. இன்னும் பெருமையோடு குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால், வளர்ச்சி அடைந்து வரும் மாநிலங்களில் 11.19% என்கிற இரட்டை இலக்க வளர்ச்சியுடன் வரலாற்றிலேயே முதன்முறையாக இன்றைக்கு இந்தியாவிலேயே 'நம்பர் ஒன்' மாநிலமாக நம்முடைய தமிழ்நாடு அந்தச் சிறப்பைப் பெற்றிருக்கிறது.

இதையெல்லாம் பார்க்கும்பொழுதுதான் ஒன்றிய பாஜக அரசுக்கு வயிற்றெரிச்சல், கோபம். ``தமிழ்நாட்டுக்கு நாம் எதுவுமே செய்வதில்லையே, இருந்தாலும் எப்படி இவ்வளவு சாதனைகளைச் செய்கிறார்கள்?" என்று நினைக்கிறார்கள். முதலமைச்சர் காலை உணவுத் திட்டத்தைத் தமிழ்நாட்டில் ஆரம்பித்தோம், இன்றைக்குப் பஞ்சாப் மாநிலத்திலும் இந்தத் திட்டத்தைப் பார்த்து அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். தமிழ்ப் புதல்வன் திட்டம், புதுமைப் பெண் திட்டத்தைத் தெலுங்கானா மாநிலத்தில் அறிமுகப்படுத்துகிறார்கள்.

### மீண்டும் குலக்கல்வித் திட்டம்

ஒன்றிய அரசு தமிழ்நாட்டுக்குக் கொடுக்க வேண்டிய நிதி உரிமையைக் கொடுப்பதில்லை. கடந்த ஆண்டு மட்டும் தமிழ்நாட்டுக்குக் கொடுக்க வேண்டிய கல்வி நிதி 2,500 கோடி ரூபாயை ஒன்றிய அரசு தர வேண்டும். இது நாம் கட்டிய வரிப்பணத்தைப் பிரித்துக் கொடுப்பதுதான்; இது ஒன்றிய அரசின் வேலை. ஆனால் 2,500 கோடி ரூபாயைக் கொடுக்கவில்லை. என்ன காரணம்? கடந்த ஆண்டு புதிய கல்விக் கொள்கை என்று ஒன்றைக் கொண்டு வந்தார்கள். மற்ற மாநிலங்கள் ஏற்றுக்கொண்டன; ஆனால் நம்முடைய தலைவர், ``இந்தப் புதிய கல்விக் கொள்கையில் என்னென்ன இருக்கிறது?" என்று பார்த்தார். மீண்டும் சமஸ்கிருதத்தைத் தமிழ்நாட்டுக்குள் திணிப்பதற்கான முயற்சி பாடத்திட்டத்தில் இருக்கிறது. மீண்டும் குறுக்கு வழியில் ஹிந்தியை எப்படியாவது தமிழ்நாட்டுக்குள் திணிக்க வேண்டும் என்று புதிய கல்விக் கொள்கையில் வழிகள் இருக்கின்றன. மீண்டும் குலக்கல்வித் திட்டம் - தாத்தா என்ன வேலை பார்த்தாரோ அதே வேலையைப் பேரன் பார்க்க வேண்டும் என்று குலக்கல்வித் திட்டத்தை மீண்டும் தமிழ்நாட்டுக்குள் நுழைப்பதற்கான முயற்சி இந்தப் புதிய கல்விக் கொள்கை.

இன்றைக்கு மற்ற மாநில முதலமைச்சர்கள் இதைப் பார்க்கிறார்கள். ``ஆமாம், தமிழ்நாட்டு முதலமைச்சர் முன்பே சொன்னார்" என்று உணர்கிறார்கள். இன்றைக்கு ஒன்றிய அரசு எந்தத் திட்டத்தைக் கொண்டு வந்தாலும் மற்ற மாநில முதலமைச்சர்கள் எல்லாம், ``தமிழ்நாடு என்ன முடிவு எடுக்கிறது? தமிழ்நாட்டு முதலமைச்சர் என்ன சொல்கிறார் பாருங்கள்" என்று எதிர்பார்க்கிறார்கள்.

இன்றைக்கு இந்தியாவுக்கே வழிகாட்டியாக இருப்பவர் நம் தமிழ்நாடு முதலமைச்சர். அதனால்தான் இன்றைக்குப் பல்வேறு வகையில் நிதி உரிமையைப் பறிக்கிறார்கள், மொழி உரிமையைப் பறிக்கிறார்கள், கல்வி உரிமையைப் பறிக்கிறார்கள். தொகுதி மறுவரையறை என்று ஒன்றைக் கொண்டு வந்தார்கள். இன்றைக்குத் தமிழ்நாட்டில் 39, பாண்டிச்சேரியைச் சேர்த்து 40 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். மக்கள்தொகையைக் கட்டுப்படுத்திய மாநிலங்களில் சிறந்த மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. அதைக் காரணம் காட்டி அந்த 39 தொகுதிகளைக் குறைத்து 32 ஆக்க முயற்சிக்கிறார்கள். இது மாநில உரிமையைப் பறிக்கின்ற வேலை.

இப்படித்தான் எஸ்.எஸ்.ஆர் (SSR) திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். இதை ஆரம்பத்தில் எதிர்த்தது நம்முடைய தலைவர்தான். ஏனென்றால் மற்ற மாநிலங்களில் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து, பிற்படுத்தப்பட்ட மக்கள், மகளிர், சிறுபான்மை மக்கள் பா.ஜ.க-வுக்கு வாக்களிப்பது இல்லை என்பதால், அவர்களுடைய வாக்குகளை எப்படியாவது நீக்க வேண்டும் என்று செய்திருக்கிறார்கள். பீகாரில் செய்திருப்பதைச் சுட்டிக்காட்டித்தான் நம்முடைய முதலமைச்சர் எதிர்த்தார்.

### 90 லட்சம் வாக்குகள் நீக்கம்

இன்றைக்குக் கிட்டத்தட்ட 90 லட்சம் வாக்குகளை நீக்கி இருக்கிறார்கள். தமிழ்நாட்டில், சென்னையில் மட்டும் பார்த்தீர்கள் என்றால் 20 லட்சம் வாக்காளர்களை நீக்கி இருக்கிறார்கள். இங்கு வந்திருக்கக்கூடிய நிர்வாகிகள், நீங்கள் தொடர்ந்து இந்த ஒரு மாதமாக இந்தப் பணிகளில் ஈடுபட்டிருப்பீர்கள். இருந்தாலும் உங்களிடம் நான் உரிமையோடு கேட்டுக்கொள்வது என்னவென்றால், அந்தப் பட்டியலில் விடுபட்டுப்போன வாக்காளர்கள், குறிப்பாக உங்களுடைய வாக்குகள், உங்கள் குடும்பத்தினரின் வாக்குகள், நண்பர்களின் வாக்குகள் ஆகியவற்றையெல்லாம் சரி செய்து மீண்டும் பட்டியலில் சேர்ப்பதற்கான பணிகளில் நீங்கள் ஈடுபட வேண்டும். பொதுமக்களின் வாக்குகள் விடுபட்டுப் போயிருக்கின்றனவா என்று பார்த்து அவற்றைச் சேர்ப்பதற்கான பணிகளில் ஈடுபட வேண்டும். வருகின்ற ஜனவரி 18-ஆம் தேதி வரை நமக்கு நேரம் இருக்கிறது.

பல்வேறு தில்லுமுல்லு வேலைகளை எல்லாம் செய்து எப்படியாவது ஜெயிக்கலாம் என்று ஒன்றிய பா.ஜ.க அரசும், அதன் அடிமைக் கூட்டமும் முயற்சிக்கின்றன. அதை முறியடிக்க வேண்டிய பொறுப்பு இங்கு வந்திருக்கக்கூடிய நம்முடைய உடன்பிறப்புகள் அத்தனை பேருக்கும் இருக்கிறது. இந்தப் பெயர் பட்டியலைத் தயவுசெய்து சரிபாருங்கள். தகுதியான ஒரு வாக்காளர் பெயர் கூட வாக்காளர் பட்டியலில் இருந்து விடுபடக்கூடாது. உங்களுடைய வாக்குரிமையை நாம் பாதுகாக்க வேண்டும்.

பாசிஸ்டுகள் அடுத்தடுத்து, தமிழ்நாட்டுக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு அமித்ஷா அவர்கள் வந்திருந்தார். தமிழ்நாட்டில் ஏதாவது ஒரு மதக்கலவரத்தையோ அல்லது சாதிக்கலவரத்தையோ ஏற்படுத்தி, அதில் குளிர் காயலாம் என்று ஒன்றிய பா.ஜ.க அரசு நினைக்கிறது. அமித்ஷா அவர்கள் என்ன சொல்லிவிட்டுப் போனார்? ``பீகார், மத்தியப் பிரதேசத்தைத் தொடர்ந்து அங்கெல்லாம் நாங்கள் ஜெயித்துவிட்டோம், பா.ஜ.க வெற்றி பெற்றுவிட்டது, எங்களுடைய அடுத்த இலக்கு தமிழ்நாடு" என்று சொல்லிவிட்டுப் போகிறார். யார் வேண்டுமானாலும் எந்த இலக்கை வேண்டுமானாலும் நிர்ணயிக்கலாம், ஆனால் தேர்தல் களத்தில் வெற்றி அடையப்போவது திராவிட முன்னேற்றக் கழகம்தான், எங்களின் உடன்பிறப்புகள்தான்.

### நிராகரிக்க வேண்டிய கடமை

ஏனென்றால் தமிழ்நாட்டு மக்கள் மிகவும் தெளிவாக இருக்கிறார்கள். பாசிச பா.ஜ.க-வையும் அடிமை அ.தி.மு.க-வையும் மொத்தமாக நிராகரிக்க வேண்டிய கடமை நம்மிடம் இருக்கிறது; அதைத் தமிழ்நாட்டு மக்கள் உணர்ந்து இருக்கிறார்கள்.

பா.ஜ.க-வின் பழைய அடிமை எடப்பாடி பழனிசாமி அவர்கள் நேற்று கூட டெல்லி சென்றிருக்கிறார். இந்த முறை பேட்டி கொடுத்துவிட்டுப் போகிறார். என்ன தெரியுமா சொல்லிவிட்டுப் போகிறார்? ``கடந்த முறை மாதிரி நான் முகத்தை மூடிக்கொண்டு போகமாட்டேன், இந்த முறை என் முகத்தைக் காட்டிக்கொண்டு போகிறேன்" என்று ஓர் எதிர்க்கட்சித் தலைவர் சொல்லிவிட்டுப் போகிறார். அப்படிப்பட்ட ஒரு கேடுகெட்ட நிலைமையில் இருக்கிறார் எடப்பாடி பழனிசாமி அவர்கள்.

ஒரு படத்தில் நகைச்சுவைக் காட்சி வரும், எதைக் கேட்டாலும் ``எல்லாவற்றையும் மேலே இருக்கிறவன் பார்த்துக்கொள்வான்" என்பது போல, எடப்பாடி பழனிசாமி அவர்கள் இன்றைக்கு ``எல்லாவற்றையும் டெல்லியில் இருக்கிறவன் பார்த்துக்கொள்வான்" என்பது போலச் சொல்லிவிட்டுப் போய்க் கொண்டிருக்கிறார். அதுதான் எடப்பாடி பழனிசாமி அவர்களிடம் இன்றைக்கு இருக்கும் ஒரே கொள்கை.

இப்படிப்பட்ட அடிமைகளையும், அவர்களின் எஜமானர்களையும் நாம் வீழ்த்த வேண்டும். இந்த முறை புதிய அடிமைகளும் சேர்வதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. அதைத் தமிழ்நாட்டு மக்கள் தெளிவாக உணர்ந்து இருக்கிறார்கள். யாரை வேண்டுமானாலும் ஏமாற்றலாம், தமிழ்நாட்டு மக்களை என்றைக்கும் ஏமாற்ற முடியாது. இன்றைக்குத் தமிழ்நாட்டு மக்களின் பேராதரவைப் பெற்ற ஒரே தலைவர், ஒரே இயக்கம் என்றால் அது நம் தலைவர்தான், நம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். ஏனென்றால் மக்களுக்கு நல்லது என்றாலும் சரி, கெட்டது என்றாலும் சரி, எந்த நேரத்திலும் 24 மணி நேரமும் களத்தில் மக்களுடன் மக்களாக நிற்பவர்கள் நாம். அதை மக்களும் உணர்ந்து இருக்கிறார்கள்.

மாற்றுத்திறனாளிகள், சிறுபான்மை மக்கள், மாணவர்கள், குறிப்பாக மகளிர் என அனைவரின் ஆதரவையும் பெற்ற இயக்கமாக இன்றைக்கு நம்முடைய அரசு, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகம் சிறப்பாகச் செயல்பட்டு கொண்டிருக்கிறது.

### முக்கியமான தேர்தல்

இங்கே வந்திருக்கக்கூடிய நிர்வாகிகளிடத்தில் நான் கேட்டுக்கொள்வது என்னவென்றால், வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தல் மிக மிக முக்கியமான தேர்தல். இது தமிழ்நாட்டை, தமிழ்நாட்டு மக்களை, தமிழ்நாட்டின் உரிமைகளை எல்லாம் பாதுகாக்கின்ற ஒரு தேர்தல். தமிழ்நாட்டைத் தமிழர்கள் ஆள்கிறார்களா அல்லது டெல்லி ஆளப்போகிறதா என்பதை முடிவு செய்யப்போகின்ற தேர்தல். இதை உணர்ந்து கழக நிர்வாகிகள் அயராது உழைக்க வேண்டும்.

நம்முடைய தமிழ்நாட்டிற்கு என்று ஒரு வரலாறு இருக்கிறது, சுயமரியாதை இருக்கிறது. அந்த வரலாற்றை, சுயமரியாதையைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு நமக்கு அதிகமாக இருக்கிறது. நம் தலைவர் அவர்கள் நமக்கு ஓர் இலக்கு கொடுத்திருக்கிறார். ``வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு" என்று. நான் தமிழ்நாடு முழுக்கத் தொடர்ந்து சுற்றுப்பயணத்தில் இருக்கிறேன். வாரத்தில் ஐந்து நாட்கள் வெளியூரில்தான் இருப்பேன். அனைத்துத் தரப்பு மக்களையும் சந்தித்து வருகிறேன்.

### வெற்றி இலக்கு 200

ஒவ்வொரு ஊருக்கு, மாவட்டத்திற்குச் செல்லும்போதும் அந்த மக்கள் அளிக்கின்ற மகிழ்ச்சியான வரவேற்பைப் பார்க்கும்போது, நிச்சயம் தமிழ்நாட்டு மக்கள் ஏற்கனவே முடிவு எடுத்துவிட்டார்கள் என்பது புரிகிறது. வரப்போவது திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிதான். தலைவர் நமக்குக் கொடுத்திருக்கக்கூடிய வெற்றி இலக்கு 200. நாம் அத்தனை பேரும் களத்தில் இறங்கி, பிரச்சாரத்தை மேற்கொண்டு, சாதனைகளை மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும். எனவே அந்தப் பணிகளை நீங்கள் நிச்சயம் செய்வீர்கள். நம்முடைய கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைத்து, நம்முடைய தலைவர் தொடர்ந்து இரண்டாவது முறையாக நிச்சயம் முதலமைச்சர் நாற்காலியில் அமர வேண்டும் என்றால், இங்கு வந்திருக்கக்கூடிய உடன்பிறப்புகள், நிர்வாகிகள் நீங்கள் உங்களின் கடமையை நிச்சயம் சரியாகச் செய்வீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

அடுத்த 90 நாட்கள் கழக நிர்வாகிகள் அயராது உழைக்க வேண்டும். களத்தில் நிற்க வேண்டும், மக்களுடன் மக்களாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நலத்திட்ட உதவி வழங்கும் நிகழ்ச்சியை இவ்வளவு சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கக் கூடிய அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கும், வருகை தந்துள்ள அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், மேயர் அவர்களுக்கும், கலைஞரின் உடன்பிறப்புகள் அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய பொங்கல் வாழ்த்துகளைக் கூறிக்கொண்டு, "வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு" என்று கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

சட்டமன்ற உறுப்பினர்கள் இ. பரந்தாமன், ஜோசப் சாமுவேல், அ.வெற்றியழகன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் ரவிச்சந்திரன், மணிமுடி, சங்கரி நாராயணன், கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் தமிழன் பிரசன்னா, வழக்கறிஞர் தாமோதரன், உமாகாந்த், ஷேக் அப்துல்லா, பரிதி இளம் சுருதி, கவிஞர் நன்மாறன், வரதன், கௌதம், மாவட்டக் கழக நிர்வாகிகள் ஏகப்பன், புனிதவதி எத்திராசு, தேவ ஜவகர், ஆசாத், மகாதேவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பி.கே.மூர்த்தி, மகேஷ்குமார், சந்துரு, கே.எஸ்.எம். நாதன், விஜயகுமார், நரேந்திரன், நாகலிங்கம், கிருஷ்ணமூர்த்தி, மருத்துவர் யாழினி, முனியாண்டி, பகுதிக் கழகச் செயலாளர்கள் ஐ.சி.எப். முரளி, நாகராஜன், டி.எஸ்.பி.ராஜகோபாலன், எம்.டி.ஆர்.நாகராஜ், தமிழ்வேந்தன், சாமிக்கண்ணு, ராஜசேகர், முரளி, வாசு, கூ.பி.ஜெயின், சுதாகர், வேலு, மாநகராட்சி நிலைக்குழு தலைவர் மருத்துவர் சாந்தகுமாரி, மண்டலக் குழுத் தலைவர்கள் ஸ்ரீராமுலு, சரிதா மகேஷ்குமார், மாமன்ற உறுப்பினர் ராஜேஸ்வரி ஸ்ரீதர், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வானவில் விஜய், துணை அமைப்பாளர்கள் பாலமுருகன், ஜெகதீஷ், வினோத், டி.ஜே.பிரபு, தனசேகர், சங்கர் நானா, உசேன், வட்டக் கழகச் செயலாளர்கள் பாபு, விஜயகுமார் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்துகொண்டனர்.